பதிப்பாளர்:— ஓ. ஆதிமூலம் சன்

20, பெருமாள்கோவில் தோட்டத்தெரு, சென்னை. 1.

இதன் விலை] 1948 [அணா 1.

ஆதித்தன் கனவு

பாடல்கள்

மங்கைமர்க்கரசி] கோரஸ் [ஆதித்தன் தாலாட்டு

என்பெலாம் இனிக்க வந்தகனியே தாலேலோ
என் துன்பமெல்லாம் அகலும் சந்திரவதன தாலேலோ
இன்பமுடன் என் மனங்கவா இளநகைமுகனே
அன்புருவாய் வந்த அருஞ்செல்வமே தாலேலோ

அங்கயற்கண்ணி கோரஸ் ஞானவடிவு தாலாட்டு

அழகெலாம் வடிவுகொண்ட அமுதமே தாலேலர
என் எழுகுலம் தழைக்கவந்த புதையலே தாலேலோ
முழுமதியே வாழ்வினில் புதுமணம் கமழ்மலரே
முல்லைநகை சொவ்வை இதழ்கொடியே தாலேலோ

ஞான வடிவு அஞ்சலி தேவி
ஆதித்தன் சாமா மகாலிங்கம்

சிந்து பைரவி

ஞான: மாதரின் கல்விகள் பயின்றிடுவேன்
மொழிகளில் உயர்வான தமிழாலே
அழகுள்ள மலர்மாலை நானும் தொடுப்பேன்
கணப்பொழுதை வீணே கழிக்க மாட்டேன்
மாதரின் கல்விகள் பயின்றிடுவேன்

சிந்து பைரவி

ஆதி: கானவித்தைக்கிணை கலைகளில் உண்டோ
கல்லையும் கனிந்திடச் செய்யும்
வேங்கையும் கானவிலங்கினங்கள்
யாவும் தன்னை மறந்தாடுமே
ஆடுமே! நாடுமே

சுடலை காளி N. ரத்தினம்
அன்னம் C. T. ராஜகாந்தம்

சுட: ஆஹா எந்தன் அன்னமே என் கண்ணே
இங்கே நீ வாவா
ஆனால் எண்ணிப்பாரு என்னைப்போல எங்கேயுமில்லே
ஆ பொண்ணே

அன்: போபோ நீ செட்டே
உனைக் கண்டாலே போதும்
சோறு வேண்டாமெப் போதும்

சுட: ,என்னைக் கல்யாணம் செய்தாக வேணும்
என்னுதான் வேணும்
அன்: நீ அடக்குவாய் பேசாதே
அது இடக்குகை வீசாதே பவுசைக் கண்டால் போதுமே
சுட: ஓஹோ எதுநீ என்னையே
ஏசவே வேண்டாம்
அன்: ஆந்தையப் போல பார்வையதுவே
ஆனாலழகனைப்பார்-போபோ வீணாசை வேண்டாம்
சுட: அத்தை மகனே ஆகாதிப்படி பேசாதே நீயே
அன்: போதும் நீ நில் நில் நில்
சொந்தம் பேசி உளருதே
சுட: அன்னம்மா, பொண்ணே நீ
அன்: வவ வவெ
சுட: என் கண்ணல்ல
அன்: பப் பபெ
ஏ கொல்லைக்காட்டு நரியைப்போல் நீ
பல்லைப் பல்லைக் காட்டாதே (ஆஹா)

மங்கைமர்க்கரசி — ஜெயகௌரி
ஆதித்தன் — மகாலிங்கம்

மதுரமான ருசியுளதே
புதுவிதமாய் பூமியில் தானே-இப்பாகம்
செய்வதெவரும் அறியாரே-பால்கோவா
சுகமிகவே தரும் மணந்தான்-உடல்
சோர்வு அகலுவது குணந்தான்
இதுபல நோயகலும் மருந்திதே
வானமுதமே தானிகரில்லை
தேடினுமே கிடைக்காதே-பால்கோவா
உடலிலும் ஊனிலும் இனிக்கும்-இதை
உண்ண மனமுமிக களிக்கும்
நல்ல திட மேவிடுமே தினமுமே
தீரந்தருமே, வீரம் பெறுமே
தின்றிடவே நன்றுமே-பால்கோவா
பால்கோவா-பால்கோவா

பஸ்மாசூர மோஹினி—நடனம்

அசுரன்—சிவன் — லலிதா—பத்மினி

சி: என்ன வரம் வேண்டும் இந்நேரம்
என்னிடமே இனி உன் மனக்குறையது உரை—என்

அ: மூவுலகில் வாழுமோர் ஜீவன் எதுவும்
நான் தொட சாம்பலாய் போக வரம்தா (மூவு)
சி: தந்தேன் தந்தேன்

லக்ஷ்மி—விஷ்ணு லலிதா—பத்மினி

ல: எங்கு செல்லுகின்றீர்
என் பிராணநாதரே (எங்)
வி: அசுரன் ஒருவனுக்கே சங்கரன்
வரம்தந்தான்—அவன் (அசு)
அதனால் உலகெங்கும் அழியக்
கொடுமை செய்கிறான் (அத)
அவனை அழித்து உலகங்காக்க வேண்டும் கண்மணி

அசுரன்—மோஹினி லலிதா—பத்மினி

அ: மனதை மயக்கவந்த கட்டழகி—எந்தன்
மதரதியோ அல்லால் மலர் மாதோ நீ யார்
மோ: யாராயிருந்தால் உனக்கென்ன
இதையறிய வீணேயிந்தக்கவலை ஏன்
அ: தெள்ளமுதே வேல் விழியும் தேன் மொழியும்
ஒயில் நடை அழகும்—எனை வாட்டுதடி
மலர் கொடியே மனமிரங்கி என் ஆவலைத்தணிப்பாய்
மோ: அப்பப்பா நீ கொடிய அசுரனன்றோ
சொன்ன சொல் எதுவாயினும்
அதை கேட்டிடுவாயோ
அ: மூன்று லோகமதும் உனக்கடிமையாக வேண்டுமா?
மோ: ஊஹூம்
அ: திரு மூர்த்திகளும் உனக்கேவல் செய்யவரவேண்டுமா?
மோ: ஊஹூம்
அ: மதிரவியைப் பிடித்து தர வேண்டுமா
எது வேண்டும் சொல்
மோ: என்னைப் போல ஆடணும்
அ: ஆஹா ஆடுவேன்
மோ: அந்த மலையில் அதோ காணும் அருவிதனில்
சென்றே நீ நீராடி வா—நீ நீராடிவா
அ: கணுக்காலளவும் ஜலமில்லை என் செய்வேன்
எப்படிக்குளிப்பேன் பெண்ணே! (கணு)
மோ: அள்ளி அள்ளி தலைமீது இறைத்துக் குளித்துவந்து
அணைந்தே இன்பம் அடைவாய் என்னை
அணைந்தே இன்பம் அடைவாய்

ஞானவடிவு அஞ்சலிதேவி

மாலை நேரத்திலே மலர் வனமே
மனதிலானந்தம் ஆகுதே
காணக்காணவே மகிழ்வாய்
என்னை மறந்து என் மனமும் துள்ளியே
ஆடுதே அலைந்தே எங்கும் தானோடுதே
மிதமாய் தென்றலும் வீசுதே ஆ...
மிகவே உல்லாசமே-ஆஹா
வண்டுகளும் மதுவை யுண்டு
செய்திடும் ரீங்காரம்
கண்டு என் மனமும் அதுபோல்
மயங்குது இந்நேரம் (மாலை)

ஆதித்தன் ஷண்முகப்ரியா மகாலிங்கம்

இன்பம் தரு மணமோ-வாழ்விலே
இன்னல் தரும் இருகால் விலங்கன்றோ
துன்பமெல்லாம் வருமே-உலகிலே
வாழ்வெல்லாம் பாழ்படவோ
மனையாள் கணவர் இருமனம் ஒன்றாய்
வாழ்தல் உயர் காதலே

சங்கராபரணம்

இறைவன் திருவருளை-மறந்து பொய்
பொருளில் துராசை கொண்டால்
அறியும் குறையும் அழிந்திடும் ஆண்மை
அல்பபோகம் ஒரு நிலை அல்லவே

சாரமதி

மணக்கவும் என்றன் மனம் இசையுமோ
மான மிழந்திட வோ
இணங்கில் துயரம் இணங்காவிடிலோ
சங்கடம் என்ன செய்வேன்

ஞானவடிவு அஞ்சலிதேவி

புன்னாகவராளி

ஆதித்தன் மகாலிங்கம்

ஞான: மணங்கமழ் வாழ்வை கூனளை மணக்கும்
வஞ்சனை செய் விதியே
பணயம் வைத்தால் கதியுண்டோ-வேலி
பயிரை அழிப்பது போவன்றோ
ஏதுமறியேன் அம்மா-இரக்கமுடன்

ஏழை யெனைக் கண்பார்
ஆதரவெது மில்லையே-அடிமைக்கருள்
நீதர மனமுமில்லையா
ஆதி சக்தி அன்னையே
அகில ஜெகத்ஜோதி தயாவாரியே!

முகாரி

ஆதி: தயாவாரி உமை அருளிருந்தால்
சஞ்சலம் என்றும் இல்லையே
சதா நம்மைக் காக்கும் தெய்வம்
அவள் மலரடி மறவேல் மனமே

ஞானவடிவு இந்துஸ்தானி அஞ்சலிதேவி

கண்டேன் கண்டேன் இன்றோர் புதுமை
எந்நாளுமே இல்லாதே என் மனம் இன்பம்
கொண்டிடும் மோஹனரூபம் (கண்)
செய்தேனே தவம் முன்னமே
இன்றே பயன் அடைந்தேன்
இவரை நான் என்றும் அறியேனே
ஆவல்தான் கொண்டேனே
வானோர் நாயகன் இவர்தானோ
ஹா! மன்மதன் தானோ
தானே வந்திங்கு இன்று
என் மனங்கொள்ளை கொண்டார் (கண்டேன்)

ஆதித்தன் ஆபேரி மகாலிங்கம்

உள்ளங்குளிர இங்குனை அடைந்தேன்
உந்தன் அற்புத சௌந்தர்யம் கண்டேன் (துள்ள)
அள்ளிப்பருகும் ஆசையால் என்னிருகண்
அசையாமலே பார்க்கவும்—உலகை மறந் (துள்ள)

காபி

மாரன் வில்லிலெழும் கூரம்பு போலும்
சரோஜ இதழ் விழிபிரண்டும் கண்டு
"ஆஹா"......................
சரோஜ இதழ் விழியிரண்டும் கண்டு (எனது)

ஹம்ஸாநந்தி

அநங்கவிலாசம் தவழும் நவயௌவன
பருவத்திலே மதன வில்லெனும் புருவத்திலே
ஒய்யாரபிடிநடையிலே சிங்காரத் துடியிடையிலே

உளம் கவர் அங்க மதன் படையிலே—காதல்
அலைமோதும் விழிக்கடையிலே (உள்ள)

ஞானம் & ஆதித்தன்] ராகமாலிகை [அஞ்சலி-மகாலிங்கம்

ஞா: உந்தன் உயிர்க்கினிய வானமுதே
ஆதி: அமுதின் இனிக்கும் கனியின் சுவையே
ஞா: உயர் இன்பமே
ஆதி: என தன்பு நீ
ஞா: கானல் தணிக்கவந்த தென்றல் நீர்
ஆதி: தென்றல் காற்றில் வந்த சுகவாரி நீ
ஞா: வாழ்வினில் சிறந்தேனே
ஆதி: கல்பக நிழலும் மறந்தேனே
ஞா: இதயந்தனில் என்றும் உமை
பூசைசெய்வேன் நாதனே
ஆதி: உலகிலின்பம் என்னாளும் நமக்
கானந்தம் தரும் கண்மணி

ஞானவடிவு ஆபோகி அஞ்சலிதேவி

என்னென்று சொல் வேனடி—என் பாங்கி
என்னென்று சொல்வேனடி
வந்தென்றன் கண் குளிரக் காட்சிதந்தார்
என்னென்று சொல்வேனடி
மாரசுந்தரா காரன் வந்துமன
மகிழ என்னை மணந்தார்—அதை
என்னென்று சொல்வேனடி

ஆதித்தன் காம்போதி மகாலிங்கம்

நடந்ததெல்லாம் கனவோ
நனவிதுதானோ
படர்ந்த என் மதிமயக்கமோ—அதை
தொடர்ந்த இந்திர ஜாலமோ (நடந்த)
பிறவிக்குருடன் கண்ணைப்பெற்று
பின்னும் இழந்ததுபோல
மாயமிது! என்ன மாயமிது!
இந்த சொப்பனபோகம்
மற்றொருமுறை காண்பேனோ
ஊர்வசியோ ரம்பையயோ
மின்னலின் கொடியோ
பார்தனில் ஒரு பெண் இதுபோல்
உண்மையிலுண்டோ (நடந்த)

ஞானவடிவு சுத்த தன்யாசி அஞ்சலிதேவி

வண்ணப்பொற் சித்திரமே—என் நிலை
எண்ணிட வல்லாயோ
உள்ளத் துணர்வில்லா—உன்னிடம்
சொல்வதில் என்ன பயன்
தங்கப்பதுமையே நீ—என் மனம்
தானறிந்தின்பமுடன்
இங்கெனக்காதரவாய்—ஒரு மொழி
இங்கிதம் சொல்லாயோ

மாண்டு

ஊருமறியேனே—உண்மையாய்
பேசுமறியேனே.........
யாருமதையறிந்தே—எனக்குரைப்
பாரும் இங்கு இல்லையே
வாளும் முடியும் கண்டு—ஒவ்வொரு
நாளும் கழிக்கின்றேன்
ஆளும் என் அன்பரையே—காண என
தாவி துடிக்கின்றதே

காபி

என் நெஞ்சிருந்த கலா மன்னவர்
தன் நெஞ்சு தானறியேன்—கிளியே
என்னை மறந்தாரோ கிளியே
என்ன நினைந்தாரோ—கிளியே
தூது நீ சொல்லாயோ—எனதொரு
துன்பங்கள் சொல்லாயோ
மாதெனக்குற்ற துணை—கிளியே
யாரும் இல்லை இனியே

ஆதித்தன்] செஞ்சுருட்டி [மகாலிங்கம்

மாயாப்ரபஞ்சமடி தங்கமே தங்கம்—மதி
மயங்கிக் கலங்கிடாதே தங்கமே தங்கம்
பாயாத மேட்டுக்கு தங்கமே தங்கம்
பாய்ச்சி பாழாகாதே நீ தங்கமே தங்கம்

சிம்மேந்திரமத்திமம்

யாக்கையிளமையதும் செல்வமுடனே
யார்க்கும் நிலைக்குமோடி தங்கமே தங்கம்
பாருக்குள்ளே பவசாகரம் அதே—தாண்ட
பரமன் பதம் பணிவாய் தங்கமே தங்கம்

தேசிக தோடி

மாடு மனைவி மக்கள் வீடும் நமக்கே-வந்து
கூடும் சந்தையுறவு தங்கமே தங்கம்
தேடும் பொருளோவெனில் சொல்லிடாமலே—ஒரு நாள்
ஓடும் ஒரு நொடிதனிலே தங்கமே தங்கம்

மத்யமாவதி

உண்டானபோது பலபேர்களுமுனை—வந்து
கொண்டாடி தொண்டு செய்வார் தங்கமே தங்கம்
வண்டாடும் மலர்போலே வையகத்திலே—கை
வரண்டால் ஒதுங்குவரே தங்கமே தங்கம்

சுடலை — காமிக் — காளி N. ரத்னம்.
அன்னம் — C. T. ராஜகாந்தம்

சுட: அதுக்குள்ளே திருந்தணும்
கெட்டகுணம் எல்லாம் விட்டு-நல்லாயிருக்க திருந்தணும்
முட்டாள்தனம் முறட்டு குணம்-விட்டு நல்லா திருந்தணும்
அன்: சின்ன பிள்ளை தனமாக-என்னமோ நான் இருந்துட்டேன்
சொன்னபடி எந்நேரமும்-இருக்க எண்ணி திருந்தறேன்
சுட: மட்டுமரியாதை யில்லா-பட்டித்தனம் போகணும் (மட்)
கெட்டிப்பேசும் வழக்கம்-விட்டு நயந்துபேச திருந்தணும்
அன்: முன்னே பின்னே புருஷனோட வாழ்ந்திருக்கேனா (கெட்)
சுட: என்ன என்ன (சிரிப்பு)
அன்: எம்மச்சான் சிரிக்கிறீங்க
முறையா வாழ சொல்லிக்கொடுத்தா
இருக்கமாட்டேனா (முறையா)
நீங்க அப்படி இப்படி செய்யிண்ணு சொன்னா
மாட்டேங்கிறனா (நீங்க)
நான் அறியாப் பொண்ணுதானே -
எனக்கு என்னுங்க தெரியும் (நான்)

மணிரங்கு — கோரஸ்

சத்தியமே ஜெயம் புவி மேலே
நித்தியம் தொழுதிடும் தெய்வமுமாமே
உத்தமர் முன்னமே உறுதிகொண் டுரைத்த
சத்திய வாக்கென்றும் பொய்யாகாதே
சத்தியமே! சத்தியம்!!

சுபம்.

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், சென்னை. நெ. 1.

பிர்மரகசியஜோதிட அரிச்சுவடி

நாலுபாகங்கள் அடங்கியது.

பிறர் உதவியின்றி முப்பது நாளிலேயே ஜோதிடம் தெரிந்துக்கொள்ளுவதற்கு இந்நூல் ஒன்றே போதுமானதாகும். இதில், கிரகதத்துவ சீலங்கள், கிரக இராசி சத்துருமித்துரு சமத்துவம் இராசி இலக்கினம், லக்கின நிச்சயம், தசாபுக்தி அந்தரம் முதலியவைகள் கணிப்பதற்கு சுலபமான வழிகளும், துவாதச பாததிசாபுக்தி அந்தர பலன்களும், கோட்சார பலன்களும், ஆயுள்கண்டம், மாரகதிசைகளும், இன்னும் ஜோதிடத்திற்கு வேண்டிய அரிய ரகசியங்களும் கரதலா மலகம்போல் விளக்கிக் காட்டியிருக்கிறது. ஜோதிடர்களும், ஜோதிடம் கற்றுக் கொள்ள விருப்பமுடையவர்களும் இந்நூலைப் பார்க்க வேண்டியது அவசியமேயாகும். கிளேஸ் கடிதம் இங்கிலீஷ் ராப்பர் பயிண்டு. விலை அணா 0. 14 0.

சோதிட விளக்க வினுவிடை

என்னும்

பெரிய சுந்தரசேகரம்

திருவள்ளுவ நாயனுர் ஏலேல சிங்கருக்கு உபதேசித்த இந்த அரிய ஜோதிடநூல் பழய ஏட்டுப் பிரதியினின்று எடுத்தெழுதியது. ஜோதிட பலாபலனுக்கு வேண்டிய பல ரசஸ்யங்களெல்லாம் சுருக்கமாகவும், விளக்கமாகவும், வினுவிடையாகவும் எழுதியுள்ளது. அநேகர் வேண்டுகோளுக்கிணங்கி கொஞ்சங் காப்பிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1-4-0

விலாசம்: ஓ. ஆதிமூலம் சன்

நெ. 20, பெருமாள்கோவில் தோட்டத்தெரு,

சென்னை. 1